## சுருக்கம்

பள்ளிக் கல்வி – கணினி கல்வி 2018-2019ஆம் கல்வியாண்டில் அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள கணினி பயிற்றுநர் பணியிடங்களை மாணவர்கள் நலன் கருதி தற்காலிகமாக தொகுப்பூதிய அடிப்படையில் தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு நியமனம் செய்து கொள்ள அனுமதித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பள்ளிக் கல்வி (பக7-1) த் துறை

அரசாணை (1டி) எண்.770

நாள் : 07.12.2018
திருவள்ளுவர் ஆண்டு 2049
விளம்பி, கார்த்திகை-21
படிக்கப்பட்டவை :-

பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.59397/வி1/இ2/2017, நாள்.30.10.2018.

------

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பள்ளிக் கல்வி இயக்குநர் தமிழகத்தில் தற்போது 2939 அரசு/ நகராட்சி மேல்நிலைப் பள்ளிகள், பள்ளிக் கல்வித்துறையின், கீழ் இயங்கி வருகின்றன எனவும் அவற்றில், தற்போது 814 கணினி பயிற்றுநர் பணியிடங்கள் காலியாக உள்ளன என்றும், இப்பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும், பொதுத்தேர்வு எழுதும் 11ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் கல்வி நலன் கருதி கணினி பயிற்றுநர் காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியது அவசியமாகிறது. எனவே, பள்ளிக் கல்வித் துறையில் அரசு/ நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் கணினி பயிற்றுநர் பணியிடங்களில் காலியாக உள்ள 814 காலிப் பணியிடங்களை மாணவர்களின் கல்வி நலன் கருதி

தற்காலிக ஏற்பாடாக நவம்பர் 2018 முதல் பிப்ரவரி-2019 முடிய நான்கு மாதங்களுக்கு அல்லது ஆசிரியர் தேர்வு வாரிய நேரடி நியமனம் மூலம் கணினி பயிற்றுநர்கள் நியமிக்கப்படும் வரை இவற்றில் எது முந்தியதோ அதுவரை பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் வாயிலாக ஒப்பந்த அடிப்படையில் ஒரு நபருக்கு தொகுப்பூதியம் ரூ.7,500/- வீதம் வழங்கி கணினி பயிற்றுநர் பணியிடங்களை நிரப்பிக் கொள்வதற்கு அனுமதி அளிக்குமாறும், மேலும் அவ்வாறு பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்பும் போது சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர், மேல்நிலைப் பிரிவிற்கான உதவித் தலைமையாசியர் மற்றும் மூத்த முதுகலை பட்டதாரி ஆசிரியர் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட குழு மூலம் ஒப்பந்த பணிக்கான ஆசிரியரை தேர்வு செய்ய வேண்டும் என்றும், இந்நியமனம் முற்றிலும் தற்காலிகமானது என தெரிவிக்கப்பட வேண்டும் என்றும், ஆசிரியர்களுக்கான தொகுப்பூதியத்தினை தலைமையாசிரியர் மூலம் வழங்குவதற்கு ஏதுவாக உரிய ஆணை வழங்குவதற்கும் அதற்காக ரூ.2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்திடவும் பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

2. மேலே பத்தி 1-இல் உள்ள பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று, கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது :-

I. அரசு/ நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் 2018-19-ஆம் கல்வியாண்டில் தற்போது காலியாக உள்ள 814 கணினி பயிற்றுநர் பணியிடங்களை டிசம்பர் 2018 முதல் பிப்ரவரி 2019 முடிய உள்ள மூன்று மாதங்களுக்கு மட்டும் தற்காலிகமாக, ஒப்பந்த அடிப்படையில், அந்தந்த ஊர்களில் அந்தந்த பள்ளி அமைந்துள்ள பகுதி மற்றும் அருகாமையில் உள்ள பகுதிகளில் உள்ள உள்ளூர் இளைஞர்களில் கணினி பட்டம் பெற்று B.Ed., தகுதி பெற்றவர்களை பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் பள்ளித் தலைமையாசிரியர், மேல்நிலைப் பிரிவிற்கான உதவித் தலைமையாசிரியர் மற்றும் மூத்த முதுகலை பட்டதாரி ஆசிரியர் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட குழு மூலமாக நியமனம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

II. இவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக நியமனம் செய்யப்படும் ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.7,500/- வீதம் தொகுப்பூதியம் வழங்கப்படும்.

III. ஒப்பந்த அடிப்படையிலான இத்தற்காலிக நியமனங்கள் தற்போதுள்ள காலிப்பணியிடங்களில் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், இந்நியமனம் முற்றிலும் தற்காலிகமானது என சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

IV. இவ்வகையில் நியமிக்கப்படும் தற்காலிக கணினி பயிற்றுநர்களுக்கு மூன்று மாதங்களுக்கு (டிசம்பர் 2018 முதல் பிப்ரவரி 2019 வரை) ஊதியம் வழங்கும் வகையில் ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.1,83,15,000/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தி மூன்று இலட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி-2(iv)இல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2202 - பொதுக்கல்வி - 02 இடைநிலைக் கல்வி - 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் - மாநிலச் செலவினங்கள் - AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம் - 33 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் - 04 ஒப்பந்த ஊதியம்

(ததொகு 2202 - 02 - 109 AA 3347)

4. மேலே பத்தி 2(iv)-இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினம் 2018-19 திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும் இருப்பினும், சட்டமன்றத்தின் ஒப்புதலை பெறும் பொருட்டு, ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி ( SI ) இச்செலவினத்தை 2018-19ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட வேண்டும். இதனை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இச்செலவினத்திற்கான உரிய கருத்துருவினை 2018-19 திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் மற்றும் துணை மதிப்பீடுகளில் 2018-19 (Supplementary Estimate 2018-19)இல் சேர்க்கத் தக்க வகையில் உரிய விவரங்களுடன் நிதி (கல்வி-II)த் துறைக்கு அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.61042/Edn-II/2018, நாள்-07.12.2018-இல்பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.2109 (இரண்டாயிரத்து நூற்று ஒன்பது).

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநில கணக்காயர், சென்னை-18/35.
அனைத்து சம்பள கணக்கு அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்:

நிதி (கல்வி II/வ.செ.பொது-I & II) துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனி செயலாளர், சென்னை-9.
இருப்பு கோப்பு/ உதிரி

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

7/12/18
பிரிவு அலுவலர்